**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 31 of 2024

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : கருப்பசாமி

Father's Name : மயில்சாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of November** 2025.

(**2** ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்**. 1** ம்**, 3** ம் எதிரிகள் ஆஜர்**. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்**)

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம், சூலூர் தாலுகா, நல்லூர் பாளையத்தில் குடியிருந்து கொண்டு டாஸ்மாக் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். கடந்த 08.07.2023 ம் தேதி மாலை சுமார் 5 மணி அளவில் நானும் குணசேகரன் என்பவரும் பூராண்டம்பாளையம் டாஸ்மாக் கடை அருகே நின்று கொண்டிருந்த பொழுது அங்கு வந்த போலீசார் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் குணசேகரன் என்பவரும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். பார்வை மகசர் **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் டாஸ்மாக்கில் சூப்பர்வைஸராக எத்தனை வருடங்கள் வேலை செய்து வருகிறேன் என்றால் 23 வருடங்களாக பணி செய்து வருகிறேன். போலீசார் என்னை விசாரித்த பொழுது கூலி வேலை செய்து வருவதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பார்வை

மகசரில் என்ன எழுதி இருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொன்ன இடம், சொன்ன நேரம் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.27 18:30:38 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**